# Meta வழங்கும் சேவைகள் மற்றும் கருவிகள் வயதுக்கு-தகுந்த அனுபவங்களை ஆதரிக்கும் விதம்

Metaவில், தனியுரிமை மற்றும் பாதுகாப்பை நேரடியாக எங்களின் தொழில்நுட்பங்களில் நாங்கள் கட்டமைக்கிறோம். ஆராய்ச்சியில் எங்கள் அணுகுமுறையை நாங்கள் பெற்றோர்கள், பதின்மவயதினர், நிபுணர்களின் நேரடிக் கருத்துகள், UN குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் உலகளாவிய ஒழுங்குமுறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளோம்.

பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்கள் பதின்மவயதினரின் ஆன்லைன் வாழ்வை மேற்பார்வையிடுவதை எளிதாக்கும் வகையில் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட உறுப்பினர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுடன் இணைந்து செயலாற்றுவதில் முன்கூட்டிய செயல்பாட்டை மேற்கொண்டுள்ளோம். பெற்றோரின் ஒப்புதல், பெற்றோர் கட்டுப்பாடுகள், வயது சரிபார்ப்பு மற்றும் வயதுக்கு-தகுந்த உள்ளடக்கம் போன்ற பகுதிகளில் அனைத்துச் செயலிகளும் கடைப்பிடிக்க வேண்டிய தரநிலைகளை உருவாக்கும் கூட்டாட்சி சட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம், இது பெற்றோருக்கு அதிகாரம் அளிக்கும் மற்றும் பயனர் தனியுரிமையைப் பாதுகாக்கும். எங்கள் இளைஞர் கொள்கை கோட்பாடுகள் பற்றி மேலும் படிக்கவும்.

பதின்மவயதினரும் இளம் நபர்களும் தாங்கள் விரும்பும் நபர்களுடன் நேரத்தைச் செலவிடும்போதும் தங்களின் ஆர்வங்கள் மற்றும் தாங்கள் யார் என்பதை ஆய்ந்தறியும்போதும் பாதுகாப்பான, வயதுக்கு-தகுந்த அனுபவத்தைப் பெற்று மகிழ்வதை உறுதிப்படுத்துவதில் உதவ நாங்கள் உருவாக்கிய உதவி விவரங்களும் கருவிகளும் இங்கே உள்ளன.

---

## பெற்றோர் மேற்பார்வை

### குடும்ப மையம்

இளையோரும் பாதுகாப்பும், தனியுரிமை மற்றும் நலமுடன் வாழ்தல் சார்ந்த முன்னணி நிபுணர்கள் வழங்கும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கான கல்வி உதவி விவரங்களையும், Meta தொழில்நுட்பங்கள் அனைத்திலும் மேற்பார்வைக் கருவிகளையும் அணுகுவதற்கான ஒரு மைய இடத்தை நாங்கள் வெளியிட்டுள்ளோம். மேற்பார்வையை அமைக்க பெற்றோரும் பதின்மவயதினரும் பரஸ்பரம் ஒப்புக்கொண்டவுடன், Facebook, Messenger, Instagram மற்றும் VR இல் அவர்களின் பதின்மவயதினரின் அனுபவத்தை மேற்பார்வையிட பெற்றோர் உதவலாம்.

### மேற்பார்வைக் கருவிகள்

இந்தக் கருவிகள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் Meta தொழில்நுட்பங்கள் அனைத்திலும் தங்கள் பதின்மவயதினரின் நேரத்தைக் கண்காணித்து நிர்வகிக்கவும், அவர்களைப் பின்தொடர்பவர்கள் மற்றும் அவர்கள் பின்தொடரும் நபர்களின் பட்டியல்களைப் பார்க்கவும், அவர்களின் இயல்புநிலை பாதுகாப்பு மற்றும் தனியுரிமை அமைப்புகளை மாற்றுவதற்கான தங்களின் பதின்மவயதினரின் கோரிக்கைகளை அனுமதிக்கவும் அல்லது மறுக்கவும், தங்களின் பதின்மவயதினர் பகிர்வதற்கு தேர்வுசெய்துள்ள தாக்கல் செய்யப்பட்ட புகார்கள் பற்றிய புள்ளிவிவரங்களைப் பெறவும் மற்றும் பலவற்றைச் செய்யவும் அனுமதிக்கின்றன. Meta Quest சாதனங்களில், பெற்றோர்களும் பாதுகாவலர்களும் VR இல் செலவிட்ட நேரத்தைப் பார்க்கலாம், வாங்குதல்கள் மற்றும் பதிவிறக்கங்கள் பற்றிய அறிவிப்புகளைப் பெறலாம் என்பது மட்டுமல்லாமல் செயலிகள் மற்றும் சமூக அம்சங்களைத் தடுக்கவும் செய்யலாம். பெற்றோர்கள் Meta Horizon Worlds பெற்றோர் மேற்பார்வையையும் அமைத்து (தற்போது US மற்றும் கனடாவில் கிடைக்கிறது) பிற கட்டுப்பாடுகளுக்கிடையே, தங்களின் பதின்மவயதினரின் பல்வேறு அமைப்புகளைப் பார்த்து சரிசெய்யலாம்.

## பதின்மவயதினருக்கான பாதுகாப்புகள்

### மெசேஜிங் அம்ச வரம்புகள்

நாங்கள் பதின்மவயதினர் பின்தொடராத அல்லது அவர்களின் தொடர்புவிவரங்களை Facebook மற்றும் Instagram இல் இயல்புநிலையில் வைத்திருக்காத 19 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களிடமிருந்து தேவையற்ற தொடர்பை வரம்பிடுகிறோம்.

### உள்ளடக்கக் கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள்

எங்களின் உணர்ச்சிமிகு உள்ளடக்கக் கட்டுப்பாடானது, தேடல், கண்டறிதல், ஹேஷ்டேக் பக்கங்கள், ரீல்ஸ், ஃபீடு பரிந்துரைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கணக்குகளில் எவ்வளவு உணர்ச்சிமிகு உள்ளடக்கம் அல்லது கணக்குகள் காட்டப்படுகின்றன என்பதில் பயனர்களுக்குக் கட்டுப்பாட்டை வழங்குகிறது. இப்போது, இயல்புநிலையாக, அனைத்துப் பதின்மவயதினரும், வயதுக்கு-தகுந்தவை அலாதவையாக இருக்க வாய்ப்புள்ள உள்ளடக்கத்தை வரம்பிட, மிகவும் வரம்பிடப்பட்ட அமைப்பான "குறைவானவை" என்பதைப் பெறுவார்கள். Facebook மற்றும் Instagram இல் நண்பர்கள் அல்லது அவர்கள் பின்தொடரும் நபர்களால் பகிரப்பட்டிருந்தாலும் கூட சில உணர்ச்சிமிகு உள்ளடக்கங்களை நாங்கள் மறைப்போம்.

### எங்களின் கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள்

எங்களின் சமூகத் தரநிலைகள் மற்றும் சமூக வழிகாட்டிகளுக்கு இணங்க, எங்களின் கொள்கைகளை மீறும் உள்ளடக்கத்தை அகற்றுவோம், மேலும் எங்களின் பரிந்துரை வழிகாட்டிகளுக்கு எதிரான கணக்குகளையும் உள்ளடக்கத்தையும் பதின்மவயதினர் கண்டறிவதைக் கடினமாக்குகிறோம்.

## வயது சரிபார்ப்பு மற்றும் கண்டறிதல்

### வயது சரிபார்ப்புக் கருவிகள்

வசதியாகவும், தனியுரிமையைப் பாதுகாக்கும் வகையிலும் இருக்கும் எங்களின் வயது சரிபார்ப்புக் கருவிகள், Instagram இல் உள்ள பயனர்களுக்கு வயதுக்கு-தகுந்த அனுபவங்களை வழங்க எங்களுக்கு உதவுகின்றன.

### ஒருவர் பெரியவரா அல்லது பதின்மவயதினரா என்பதைக் கண்டறிய AIஐப் பயன்படுத்துதல்

AI ஆனது ஒரு நபரின் வயதை நன்கு புரிந்துகொள்ள எங்களுக்கு உதவுகிறது என்பதுடன் பதின்மவயதினருக்கு வயதுக்கு-தகுந்த அனுபவங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த உதவ பயன்படுத்தப்படுகிறது. இதில் Facebook டேட்டிங்கை அணுகுதல் அல்லது அறிமுகமில்லாத பெரியவர்களிடமிருந்து மெசேஜ்களைப் பெறுவதில் இருந்து பதின்மவயதினரை வரம்பிடுதலும் அடங்கும்.

© 2024 Meta

Meta

## தனியுரிமை

### இயல்புநிலையாகவே உள்ள பதின்மவயதினருக்கான தனியுரிமை அமைப்புகள்

அவர்கள் முதலில் Facebook மற்றும் Instagram இல் சேரும்போது, 16 வயது மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய (அல்லது குறிப்பிட்ட நாடுகளில் 18 வயது) பதின்மவயதினர் இயல்புநிலையாகவே தனிப்பட்ட கணக்குகள் மற்றும் மிகவும் தனிப்பட்ட அமைப்புகளில் வைக்கப்படுவார்கள்.

### பதின்மவயதினரின் உள்ளடக்கத்தை தனிப்பட்டதாக வைத்திருத்தல்

தங்களைப் பின்தொடராத பதின்மவயதினரைப் பயனர்கள் குறியிடவோ குறிப்பிடவோ அல்லது ரீல்ஸில் அல்லது கைட்ஸில் உள்ள ரீமிக்ஸில் அவர்களின் உள்ளடக்கத்தைச் சேர்க்கும் திறனை முதலில் அவர்கள் Instagram இல் சேரும்போதே இயல்புநிலையாகவே நாங்கள் முடக்குகிறோம்.

### பதின்மவயதினருக்கான தனியுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பான உதவி விவரங்கள்

Facebook, Messenger, Instagram மற்றும் Meta Quest அனைத்திலும் தனியுரிமை அமைப்புகள், இயல்புநிலைகள் மற்றும் அம்சங்கள் பற்றிய கூடுதல் தகவல்களுடன் பதின்மவயதினருக்கான பிரத்தியேக தனியுரிமை உதவி விவரப் பக்கம் எங்களிடம் உள்ளது.

## பதின்மவயதினருக்கான கருவிகள்

### இடைவேளை எடுத்துக்கொள்ளுதல்

Facebook மற்றும் Instagram இல் பதின்மவயதினர் சமூக ஊடகங்களில் இருந்து விலகி இருக்கும் தருணத்தை ஒதுக்குவது எப்படி என்பது குறித்த நிபுணர் ஆதரவு வழங்கும் உதவிக்குறிப்புகளைக் காட்டும் இடைவேளை நினைவூட்டல்களை இயக்கலாம்.

### அமைதியான பயன்முறை

Instagram இல் பதின்மவயதினர் இப்போது அமைதியான பயன்முறையில் கவனம் செலுத்துவதற்கும் ஆரோக்கியமான எல்லைகளை அமைப்பதற்கும் கூடுதல் வழிகளைக் கொண்டுள்ளனர், இது அறிவிப்புகளைத் தடுக்கிறது, செயலியை அடர் நிற பின்னணியில் வைக்கிறது அத்துடன் யாராவது உங்களுக்கு மெசேஜ் செய்தால் தானாக பதில்களை அனுப்புகிறது.

### தலைப்புகளை மாற்றுவதற்கான தூண்டுதல்கள்

Instagram இல் பதின்மவயதினர் கண்டறிதலில் ஒரு குறிப்பிட்ட வகையான உள்ளடக்கத்தைப் பார்க்கும்போது வேறு தலைப்புக்கு மாற அவர்களை ஊக்குவிக்கும் அறிவிப்புகளைப் பெறுகிறார்கள்.

### வரம்பிடுதல்

பதின்மவயதினர் தங்கள் கணக்குகளை தேவையற்ற தொடர்புகளிலிருந்து அமைதியான அல்லது மிகவும் நுட்பமான முறையில் வரம்பிடுவதன் மூலம் தங்கள் கணக்குகளைப் பாதுகாத்துக் கொள்ள உதவலாம், இதனால் தடைசெய்யப்பட்ட ஒரு நபரின் பதிவுகளில் உள்ள கருத்துகள் அந்த நபருக்கு மட்டுமே தெரியும்.

### விருப்பம் தெரிவித்தல் எண்ணிக்கையை மறைத்தல்

விருப்பம் தெரிவித்தல் எண்ணிக்கைகளை அல்லாமல், பகிரப்படும் நினைவுகளை கவனத்தில் கொண்டு, ஃபீடில் உள்ள அனைத்துப் பதிவுகளிலும் உள்ள விருப்பம் தெரிவித்தல் எண்ணிக்கையை மறைக்க பயனர்களுக்கு விருப்பத்தேர்வு உள்ளது.

## வயதுக்கு-தகுந்த விளம்பரங்கள்

### பதின்மவயதினருக்கான விளம்பர இலக்கிடுதல் விருப்பத்தேர்வுகளை வரம்பிடுதல்

பதின்மவயதினருக்கு விளம்பரங்களைக் காட்ட வயது மற்றும் இருப்பிடத்தை மட்டுமே அவர்களைப் பற்றிய ஒரே தகவலாகப் பயன்படுத்துவோம்.

### பதின்மவயதினருக்கு அதிகக் கட்டுப்பாட்டை வழங்குதல்

பதின்மவயதினர் Facebook மற்றும் Instagram இல் பார்க்கும் விளம்பர வகைகளை விளம்பரத் தலைப்புக் கட்டுப்பாடுகள் மூலம் நிர்வகிக்கலாம்.

### விளம்பரப்படுத்துதலுக்கான தலைப்புகளை பதின்மவயதினருக்கு வரம்பிடுதல்

மது, நிதி தயாரிப்புகள் மற்றும் எடை குறைக்கும் பொருட்கள் அல்லது சேவைகள் போன்ற தடைசெய்யப்பட்ட தலைப்புகள் பற்றிய விளம்பரங்களை 18 வயதுக்கு உட்பட்ட நபர்களுக்கு (அல்லது குறிப்பிட்ட நாடுகளில் அதிக வயதில் உள்ளவர்களுக்கு) காட்டுவதைத் தடை செய்கிறோம்.

## கல்வி மற்றும் உதவி விவரங்கள்

### குடும்ப மையம்

Meta தொழில்நுட்பங்கள் அனைத்திலும் உங்கள் குடும்பத்தின் அனுபவத்திற்கு ஆதரவு தெரிவிக்க உதவ, நம்பகமான நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவி விவரங்கள் மற்றும் உதவிக்குறிப்புகள் எங்கள் குடும்ப மையத்தில் உள்ளன. பெற்றோர்கள் Instagram பெற்றோருக்கான வழிகாட்டி மற்றும் Meta Quest பெற்றோர் உதவி விவரம் மூலம் எங்கள் கருவிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றியும் மேலும் அறியலாம்.

### பாதுகாப்பு மையம்

எங்கள் பாதுகாப்பு மையமானது, Meta தொழில்நுட்பங்கள் அனைத்திலும் பாதுகாப்பிற்கான எங்களின் அணுகுமுறையை, பதின்மவயதினர் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் உட்பட சமூகங்களைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உதவிட நாங்கள் கட்டமைத்த கொள்கைகள், கருவிகள், கூட்டிணைவுகள் மற்றும் உதவி விவரங்களை விவரிப்பதன் மூலம் விளக்குகிறது.

© 2024 Meta